செ.வெ.எண்: 445/2020 நாள்: 16.11.2020

**திருவண்ணாமலை மாவட்ட வரைவு வாக்காளர் பட்டியல் 2021**
**மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப. வெளியிட்டார்...**

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் இன்று (16.11.2020) தேர்தல் ஆணையத்தின் உத்திரவுப்படி வரைவு வாக்காளர் பட்டியல்-2021 அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் வெளியிட, திருவண்ணாமலை வாக்காளர் பதிவு அலுவலரும் வருவாய் கோட்ட அலுவலருமான திருமதி மா. ஸ்ரீதேவி அவர்கள் பெற்றுக் கொண்டார். மாவட்ட வருவாய் அலுவலர் திரு. பொ. இரத்தினசாமி, உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு. அமித்குமார், இ.ஆ.ப., தேர்தல் வட்டாட்சியர் திருமதி. புவனேஷ்வரி, துணை ஆட்சியர் (பயிற்சி) செல்வி. அஜீதா பேகம், தேர்தல் துணை வட்டாட்சியர்கள் மற்றும் அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் உடன் இருந்தனர்.

**திருவண்ணாமலை மாவட்ட வரைவு வாக்காளர் பட்டியலில் உள்ள வாக்காளர்களின் விபரம் பின்வருமாறு:**

| வ எண் | சட்டமன்றத் தொகுதியின் பெயர் | ஆண்கள் | பெண்கள் | இதரர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | 062 செங்கம் (தனி) | 132927 | 134458 | 6 | 267391 |
| 2 | 063 திருவண்ணாமலை | 135363 | 143774 | 37 | 279174 |
| 3 | 064 கீழ்பென்னாத்தூர் | 122197 | 126004 | 9 | 248210 |
| 4 | 065 கலசப்பாக்கம் | 116982 | 119992 | 12 | 236986 |
| 5 | 066 போளூர் | 117842 | 121563 | 5 | 239410 |
| 6 | 067 ஆரணி | 130937 | 138351 | 12 | 269300 |
| 7 | 068 செய்யார் | 124804 | 129724 | 7 | 254535 |
| 8 | 069 வந்தவாசி (தனி) | 116309 | 118730 | 5 | 235044 |
| **மொத்தம்** | | **9,97,361** | **10,32,596** | **93** | **20,30,050** |

இன்று வெளியிடப்படும் வாக்காளர் பட்டியல் அனைத்து கோட்டாட்சியர் அலுவலகங்கள், வட்டாட்சியர் அலுவலகங்கள், நகராட்சி அலுவலகங்கள் மற்றும் அந்தந்த பகுதி வாக்குச் சாவடி மையங்களில் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்படும். மேலும், https://www.elections.tn.gov.in/ என்ற இணையதளத்திலும் வாக்காளர்கள் தங்கள் பெயரை சரிபார்த்துக் கொள்ளலாம்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் இன்று 16.11.2020 முதல் 01.01.2021 ஆம் தேதியை அடிப்படையாக கொண்டு வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறைத் திருத்தம்-2021 பணி நடைபெறவுள்ளது. அதாவது வரும் சனவரி 1-ம் தேதியன்று 18 வயது நிறைவடைந்தவர்கள் (அதாவது 01.01.2003 வரை பிறந்தவர்கள்) தங்களின் பெயரை வாக்காளர் பட்டியலில் சேர்த்துக் கொள்ளலாம்.

| | |
|---|---|
| புதிய வாக்காளர்கள் அதாவது 01.01.2021 அன்று 18 வயது நிறைவடைந்தவர்கள் (அதாவது 01.01.2003 வரை பிறந்தவர்கள்) மற்றும் வேறு சட்டமன்றத் தொகுதியிலிருந்து புதியதாக குடிபெயர்ந்தவர்கள் | படிவம்- 6 உடன் வண்ணப் புகைப்படம், வயது சான்று மற்றும் இருப்பிட ஆதாரம் |
| மேலும் வாக்காளர் பட்டியலில் இருந்து வாக்காளர் பெயர் நீக்கம் செய்ய ஆப்சேபணை தெரிவிக்க | படிவம்- 7 |
| பெயர், விபரங்களில் திருத்தம் மற்றும் புகைப்படம் மாற்றம் செய்ய | படிவம்-8 |
| ஒரே தொகுதிக்குள் வாக்காளர் முகவரி மாற்றம் செய்ய | படிவம்-8ஏ |

**சிறப்பு சுருக்க முறைத் திருத்தம் 2021-ன் கால அட்டவணை பின்வருமாறு:**

| | |
|---|---|
| மனுக்கள் பெறப்படும் நாட்கள் | 16.11.2020 முதல் 15.12.2020 வரை |
| சிறப்பு முகாம் நடைபெறும் நாட்கள் | 21.11.2020, 22.11.2020 மற்றும் 12.12.2020, 13.12.2020 |
| இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் நாள் | 20.01.2021 |

மேலே குறிப்பிட்ட சிறப்பு முகாம் நடைபெறும் நான்கு நாட்களில் அந்தந்த பகுதிகளில் உள்ள வாக்குச் சாவடி மையங்களில், வாக்குச் சாவடி நிலைய அலுவலர்கள் மூலமாக மனுக்கள் பெறப்படும். அங்கு வாக்காளர்கள் சென்று உரிய படிவங்களை பெற்று தகுந்த ஆதாரத்துடன் விண்ணப்பிக்கலாம், மற்ற வேலை நாட்களில் மனுக்களை அந்தந்த பகுதியில் உள்ள கோட்டாட்சியர் அலுவலகம், வட்டாட்சியர் அலுவலகம், நகராட்சி அலுவலகம், வாக்குச் சாவடி அலுவலர்களிடம் அல்லது தேர்தல் ஆணைய இணையதளம் மூலமாகவும் விண்ணப்பிக்கலாம். இணையதளம் முகவரி: https://www.nvsp.in/

திருவண்ணாமலை மாவட்டம் முழுவதும் வரும் 25.01.2021 அன்று 11-வது **”தேசிய வாக்காளர் தினம்”** சிறப்பாக கொண்டாடப்பட உள்ளது. அன்றைய தினம் வாக்காளர்கள் அந்தந்த பகுதிகளில் உள்ள வாக்குச் சாவடி மையங்களில் நடைபெறும் வாக்காளர் தின விழாவில் கலந்து கொண்டு வாக்காளர் உறுதி மொழியை ஏற்றுக் கொள்ள வேண்டும். திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள வாக்காளர்கள் அனைவரும் இவ்வாய்ப்பினைப் பயன்படுத்தி தகுதியுள்ள வாக்காளர்கள் அனைவரும் வாக்காளர் பட்டியலில் தங்கள் பெயரை சேர்த்துக் கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப. அவர்களால் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவண்ணாமலை மாவட்டம்.**